# ஒதுக்கீட்டுத் தலைப்பு 257 - மாவட்ட செயலகம் களுத்துறை

## களுத்துறை மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்களின் கணக்குகள் சம்பந்தமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2010 ஆம் ஆண்டு

### 01. மாவட்ட செயலகங்களின் பிரதான செயற்பணிகள்

I. வறுமையை ஒழிப்பதற்கான வழிவகுத்தல்
II. தர்தல் தொடர்புறுத்தல் பணிகள்
III. அபிவிருத்திச் செயற்திட்டங்களை திட்டமிடலும் மேற்பார்வை செய்தலும்.
IV. அனர்த்த நிவாரணச் செயற்திட்டங்களை மற்றும் புனர்நிர்மாணச் செயற்திட்டங்களை நிர்வகித்தல்
V. மாவட்டச் செயற்திட்ட நிர்வாகமும் வழிகாட்டலும்
VI. வருமானங்களைச் சேகரித்தல்.

### 2. மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

| | |
|---|---|
| களுத்துறை | பண்டாரகம |
| பாணந்துறை | இங்கிரிய |
| பேருவளை | பாலிந்தநுவர |
| தொடங்கொடை | புலத்சிங்கள |
| மதுகம | மதுராவெல |
| அகலவத்த | வலல்லாவிட்ட |
| மில்லனிய | ஹொரணை |

### 3. வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

மாவட்ட செயலகத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று கணக்காண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்குகள்

### 4.1 மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்

களுத்துறை மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழுள்ள 14 பிரதேச செயலகங்களுக்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 499,150,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 483,636,373 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் தேறிய சேமிப்பு ரூபா 15,513,627 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய ஏற்பாட்டில் 3 சதவீதம் ஆகும்.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | திணைக்களம் | தேறிய ஏற்பாடுகள் | | பயன்பாடுகள் | | சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| 257 | மாவட்ட செயலகம் களுத்துறை | 447,400,000 | 51,750,000 | 432,214,158 | 51,422,215 | 15,185,842 | 327,785 |

### 4.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நிதிஏற்பாட்டின் பயன்பாடு

பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் பல்வேறு செயற்பாடுகளுக்காக அனுப்பப்படடிருந்த விசேட நிதி ஏற்பாடுகளின் கூட்டுத்தொகையான ரூபா 2,300,119,990 தொகையின் செலவினம் தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| விடய இலக்கம் | அமைச்சு /திணைக்களம் | கிடைத்த நிதி ஏற்பாடு | உள்ளபடியான செலவினம் | சேமிப்பு/மிகை (2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறானவை) |
|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. |
| 101 | புத்தசாசனம் மற்றும் சமய விவகார, ஒழுக்க விவகார அமைச்சு | 150,000 | 150,000 | - |
| 105 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 839,963,228 | 667,670,744 | 172,292,484 |
| 106 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 24,263,646 | 23,585,098 | 678,548 |
| 110 | நீதி அமைச்சு | 2,419,404 | 1,704,811 | 714,593 |
| 117 | பெருந்தெருக்கள் அமைச்சு | 10,000 | 10,000 | - |
| 120 | சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு | 10,372,239 | 7,580,188 | 2,792,051 |
| 121 | பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 1,096,820 | 420,553 | 676,267 |
| 124 | சமூக சேவைகள் அமைச்சு | 6,907,296 | 6,556,597 | 350,699 |
| 127 | தொழிலுறவு மற்றும் வினைத்திறன் மேம்படுத்துகை அமைச்சு | 193,266 | 194,214 | (948) |
| 133 | தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 10,782,001 | 8,949,734 | 1,832,267 |
| 134 | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 29,250 | 29,170 | 80 |
| 139 | மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சு | 880,000 | 436,756 | 443,244 |
| 142 | கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 10,650,000 | 10,649,757 | 243 |
| 145 | மீள்குடியேற்ற அமைச்சு | 5,275,423 | 4,902,520 | 372,903 |
| 153 | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 136,369,920 | 135,503,435 | 866,485 |

| | | | | |
|---|---|---|---|---|
| 201 | பௌத்த அலுவல்கள் திணைக்களம். | 8,271,504 | 8,082,820 | 188,684 |
| 204 | இந்து சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 100,000 | 100,000 | - |
| 216 | சமூக சேவைத் திணைக்களம் | 5,458,374 | 5,898,740 | (440,366) |
| 217 | நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் | 4,535,795 | 4,555,025 | (19,230) |
| 218 | சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | 409,738,961 | 364,037,051 | 45,701,910 |
| 227 | ஆட்பதிவுத் திணைக்களம் | 10,644 | 10,644 | - |
| 253 | ஓய்வூதியத் திணைக்களம் | 822,642,219 | 749,661,197 | 72,981,022 |
| | | 2,300,119,990 | 2,000,689,054 | 299,430,936 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செலவின தலைப்பு இலக்கம் 110 மற்றும் 120 என்பவைகளில் 25% இற்கு மேலான நிதிஏற்பாடுகள் எஞ்சியிருந்ததுடன் செலவினத் தலைப்பு இலக்கம் 121 மற்றும் 139 என்பவைகளில் 50% இற்கு மேலான நிதிஏற்பாடுகள் எஞ்சியிருந்தன.

(ii) தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுச் செயலாளரின் எம்என்பீ மற்றும் ஈரீடி/05/19/50/2010 ஆம் இலக்க 2010 பெப்ரவரி 22 ஆந் திகதிய கடிதத்தின் 08 ஆவது பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மாவட்ட செயலகத்தின் சுற்றாடலில் அமைந்துள்ள புத்தர் சிலை நிர்மாணித்தலின் இறுதிக் கொடுப்பனவு மற்றும் வேறு மூலதனப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக முறையே ரூபா 220,000 மற்றும் ரூபா 441,041 தொகைகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(iii) 105-2-3-0-2502 மற்றும் 105-2-2-6-2502 என்பவைகளின் கீழ் புலத்சிங்ஹல மற்றும் பண்டாரகம பிரதேச செயலகங்களுக்காகக் கிடைத்திருந்த ரூபா 1,409,293 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகள் முழுவதும் எஞ்சியிருந்தன.

## 4.3 கணக்காய்வு மற்றும் கணக்காய்வு நோக்கெல்லை

களுத்துறை மாவட்ட செயலகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

## 4.4 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 4.5 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் களுத்துறை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் நிலைமைகள் இந்த அறிக்கையின் (அ) முதல் (ஈ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் 4.6 முதல் 4.9 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

(i) மாவட்ட செயலகத்தினால் 2011 மார்ச் 31 ஆந் திகதியில் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

| தலைப்பு / விடய இலக்கம் | கணக்கின் பெயர் |
|---|---|
| 257 | ஒதுக்கீட்டுக் கணக்கு |
| 25701 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் தொடர்பான இணக்கக்கூற்று |

### (ஆ) பாதீட்டு முரண்கள்

செலவின விடயம் 04 தவிர மற்றைய செலவின விடயங்களின் நிதிஏற்பாடுகளின் சேமிப்பு தேறிய நிதிஏற்பாட்டில் 17.8% முதல் 46.64% வரையிலான வீச்சில் காணப்பட்டது.

### (இ) பொது வைப்புக்கள்

(i) நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் பதிவழிக்கக்கூடியதாக இருந்த ரூபா 54,112,612 தொகையான வைப்புக்களை பதிவழிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) திரியட்ட சவிய செயலமர்வினைச் செயற்படுத்துவதற்காக தொழிலாளர் திணைக்களத்தினால் அனுப்பப்பட்டிருந்த ரூபா 8,750 தொகையானது உரிய செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

25701 ஆம் இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் தொடர்பான 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதி வரையில் அறவிடவேண்டிய மொத்த நிலுவை கடன் மீதி ரூபா 1,123,363 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 649,199 தொகையானது 3 வருடங்களுக்கு மேலானதாக இருந்ததுடன் அம்மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

## 4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

**பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டதுமான சொத்துக்கள்**

தளபாடங்களுடன் பழைய மாவட்ட செயலாளர் உத்தியோகபூர்வ இல்லமும் அதற்குரிய காணியும் 2006 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாடற்று இருந்த இடத்தில் பயிற்சிப்பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்காக 2010 ஆம் ஆண்டில் பொதுநிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிடமிருந்து கிடைத்திருந்த நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் ரூபா 1,159,501 தொகை செலவில் திருத்தப்பட்டிருந்த போதிலும் 2011 செப்தெம்பர் வரையில் உரிய செயற்பட்டிற்கு ஈடுபடுத்தாமல் பயன்பாடற்றுக் காணப்பட்டது.

## 4.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், நிதிப்பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டதன் பிரகாரம் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண அறிவுறுத்தல்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரித்து கீழே தரப்படுகின்றது.

(அ) இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

(i) நி.பி 110

இழப்பு, நட்டப்பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.6 ஆம் பிரிவு

கடன்காரர்களை சேவையை விட்டு விலக்குதல், சேவையை விட்டுச் செல்லல் போன்ற சந்தர்ப்பங்களில் முறையாக அக்கடன் மீதிகளை அறவிடக்கூடிய செயற்திட்டமொன்று எடுக்கப்பட்டதன் பின்னரும் அறவீடு செய்ய முடியாதிருந்த தொகை ரூபா 249,933 ஆகும்.

(ஆ) பொது நிருவாகச் சுற்றறிக்கை

2003 ஏப்ரல் 03 ஆம் திகதிய 394/04 ஆம் இலக்க சுற்றறிக்கை

பண்டாரகம உதவி பிரதேச செயலாளரினால் 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் தொடர்புடைய சுற்றுநிருபத்தின் தொலைபேசிச் செலவினை விஞ்சி ரூபா 66,072 தொலைபேசி அழைப்புகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பணமானது 2011 ஆம் ஆண்டு வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை

2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய இல. 118

மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 386,961 தொகையான கடன் மீதி 3 வருடங்களுக்கும் மேலான காலத்திலிருந்து நிலுவையாக இருந்த

போதிலும் தொடர்புடைய சுற்றுநிருபத்தின் பிரகாரம் அறவீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

(ஈ) அமைச்சின் கட்டளைகள்

| | |
|---|---|
| காணி, நீர்ப்பாசன மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் 1993 ஏப்ரல் 08 ஆந் திகதிய 03/சேத/1/15 ஆம் இலக்க கடிதம் | பொதுச் செயற்பாடுகளுக்காக அரசினால் கையேற்கப்படும் காணிகளில் அமைச்சினுடைய கோவை இலக்கம், ஆரம்ப வரைபட இலக்கம், காணித் துண்டுகளின் இலக்கம், செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகை மற்றும் செலுத்தப்பட்ட வட்டிப்பணம் போன்ற விபரங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்று ஒவ்வொரு மாதத்திற்காகவும் அடுத்துவரும் மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் தொடர்புடைய அமைச்சிற்கு அனுப்பவேண்டிய போதிலும் அவ்வறிக்கை அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

(உ) காணி கையேற்றல் அதிகாரச் சட்டம்

| | |
|---|---|
| 1964 இன் 28 ஆம் இலக்க திருத்தப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 32 மற்றும் 33 ஆம் இலக்கப் பிரிவுகள் | காணிகளைச் கையேற்கும் போது செலுத்த வேண்டிய நட்டஈட்டுப் பணம் கொடுக்க வேண்டிய காணி உரிமையாளர்களினால் ஏற்க முடியாதவிடத்து அப்பணம் மாவட்ட நீதி மன்றத்தின் வழக்கு இலக்கமொன்றின் கீழ் வைப்பிலிடப்பட வேண்டியிருந்த போதிலும் இவ்வாறான ரூபா 6,203,992 தொகையானது மாவட்ட நீதிமன்றத்தில் வைப்பிலிடப்படாமல் பொது வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்தது. |

## 4.8 வங்கிக் கணக்கின் செயற்பாட்டுக் குறைபாடுகள்

### செம்மையாக்கக்கூடிய மீதிகள்

2010 திசெம்பர் மாதத்திற்காக மாவட்டச் செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்களினால் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக்கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ஒரு வருடத்திற்குக் குறைவான காசோலைகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 1,815,759 ஆக இருந்தது.

## 4.9 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் வெற்றிடங்கள் (14 பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கி)

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பான நிலைமை வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீரித்த பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| i | சிரேஷ்ட நிலை | 48 | 46 | 2 | - |
| ii | மூன்றாம் நிலை | 18 | 11 | 7 | - |
| iii | இரண்டாம் நிலை | 1,289 | 1,115 | 180 | 6 |
| iv | ஆரம்ப நிலை | 146 | 147 | - | 1 |
| | மொத்தம் | 1,501 | 1,319 | 189 | 7 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மனித வள தகவல்களின் பிரகாரம் 05 கணனித் தரவுக் குறிப்பாளர்கள், வரவேற்பு உத்தியோகத்தர் மற்றும் அலுவலக உதவியாளர் என்போர் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் பண்டாரகம பிரதேச செயலகத்தின் கணனித் தரவுக் குறிப்பாளர் ஒருவரினது வெற்றிடம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.